பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 136 நாள்: 19.10.2017

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர கொசு தடுப்பு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை சார்பாக டெங்கு காய்ச்சலை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீவிர கொசு ஒழிப்பு பணியில் இன்று (19.10.2017) 200 கோட்டங்களிலும், 1 கோட்டத்திற்கு 1 குழு வீதம் மொத்தம் 200 குழுக்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பணியில் 1532 மலேரியா பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த மலேரியா பணியாளர்களை கொண்டு 1,82,146 வீடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 491 வீடுகளில் உள்ள கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டன. 211 கொசு மருந்து அடிக்கும் கைத்தெளிப்பான்களும், 161 கையினால் புகை பரப்பும் இயந்திரங்களும், 36 வாகனம் மூலம் புகை பரப்பும் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் சம்மந்தமாக விழிப்புணர்வு எற்படுத்துவதற்காக 142 இடங்களில் கொசுப்புழுக்கள் உருவாகும் விதங்கள், அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து கண்காட்சி அமைத்து விளக்கப்பட்டது. 138 அரசு அலுவலகங்களில் ஆய்வு செய்யப்பட்டு, கொசுப்புழு இருந்த கட்டிடங்களில், கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு விழிப்புணர்வு எற்படுத்தப்பட்டது.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி